# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2008 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, மெத்சித் தர்மதூத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

---

(2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

**2008, மாச்சு மாதம் 28 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது**

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 10.00** **தபாற் செலவு: ரூபா 5.00**

## 2008 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, மெத்சித் தர்மதூத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம்

[2008 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 28 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. (கூட்) 9/2006

### மெத்சித் தர்மதூத மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

"மெத்சித் தர்மதூத மன்றம்" என அழைக்கப்படுவதும் அறியப் படுவதுமான மன்றம் ஒன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் தாபிக்கப் பட்டுள்ளதாதலாலும் : — முன்னுரை.

அத்துடன் சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப் பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ள தாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாகவிருக்குமாதலாலும் :

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாக :-

1. இச்சட்டம் 2008 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, மெத்சித் தர்மதூத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக்காட்டப் படலாம். — சுருக்கப்பெயர்.

2. இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் "மன்றம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) மெத்சித் தர்மதூத மன்றத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாப னத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக்கொள்ளப்படு பவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) "மெத்சித் தர்மதூத மன்றம்" என்ற பெயரின் கீழும் மகுடத் தின்கீழும் இடையறா வழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப் பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது, அப்பெயர் கொண்டு வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன் ; பொது இலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதை மாற்றவும் அது, முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டதா யிருத்தலும் வேண்டும். — மெத்சித் தர்மதூத மன்றத்தைக் கூட்டிணைத்தல்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) இலங்கைப் பெளத்தர்களிடையே புத்த தர்மம் சார்பான ஆத்மீகத்தையும் கலாச்சார பழக்கங்களையும், படிப்பினையையும் மேம்படுத்தலும் பாதுகாத்தலும் ;

(ஆ) பெளத்தர்களுக்காக வழிபாட்டுச் சேவைகளை நடாத்துவதன்மூலம் புத்த தர்மத்தை அனுட்டிப்பதும், மற்றும் இயைபான சடங்குகளைப் புரிவதன்மூலம் மைத்திரி யாத்திர - மும்மணிகளை எடுத்துச்செல்லுதலும் ;

(இ) இலங்கை பெளத்த மக்களின் சமூக பொருளாதார நிலைகளை உயர்த்துதலும் மேம்படுத்துதலும் அத்துடன் புத்த தர்மபோதனையால் உயர்வொன்றை எய்த அவர்களுக்கு உதவுதலும் ;

(ஈ) வறுமை நிலையிலுள்ள பெளத்த பிள்ளைகளுக்கு நிதி உதவி மற்றும் புலமைப் பரிசில்கள் வழங்குதலும் ; அத்துடன்

(உ) கூட்டுத்தாபனத்தின் அதே குறிக்கோள்களையுடைய வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனம் அல்லது ஒழுங்கமைப்பு எதனுடனும் ஒத்துழைத்தலும், ஒன்றிணைத்தலும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.

**4.** இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் ஏதேனுமொன்றை மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவையான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தகையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும் காரியங்களையும் செய்வதற்கும், புரிவதற்கும் நிறைவேற்றுவதற்கும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவங்களுள் வங்கிக் கணக்குகளைத் தொடங்கவும், நடாத்தவும், முடிவுறுத்தவும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பின்றி பணங்களைக் கடனாகப் பெறவும் அல்லது திரட்டவும், மானியக்கொடைகளையும் நன்கொடை

களையும் பெறவும் அல்லது சேகரிக்கவும், அதன் நிதியை முதலீடு செய்யவும், ஒப்பந்தங்களிலும் உடன்படிக்கைகளிலும் ஈடுபடுதல், தேவையான ஆளணியினரை வேலையிலீடுபடுத்தல், வேலைக்கமர்த்தல், வேலைநீக்கஞ்செய்தல் என்பவற்றுக்குமான தத்துவமும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5.** (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள், 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தேர்ந்தெடுக்கப்படும் முகாமைச்சபை ஒன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்த மன்றத்தின் முகாமைச் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச் சபையாதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் முதலாவது முகாமைச்சபை இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து மூன்றாண்டுக் காலப்பகுதியொன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் விதிகள்.

**6.** (1) ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத வாக்குப் பெரும்பான்மைகொண்டு பின்வரும் கருமங்கள் எல்லாவற்றுக்கும் அல்லது எவற்றுக்கும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக்காலம் ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :—

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், ஒவ்வொரு வகை உறுப்பினர்களும் செலுத்தவேண்டிய கட்டணங்கள் ; அத்துடன் உறுப்பினர்களைச் சேர்த்தல், அவர்களை விலக்குதல் அல்லது அவர்கள் பதவி விலகல் ;

(ஆ) முகாமைச்சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் பதவிநீங்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதல் அல்லது பதவியை வறிதாக்கல் ; அத்துடன் முகாமைச்சபையின் தத்துவங்கள், கடமைகள், நடத்தை என்பன ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள், சேவையாளர்கள் என்போரின் தத்துவங்களும், கடமைகளும், பணிகளும் ;

(ஈ) முகாமைச் சபையினதும் கூட்டுத்தாபனத்தினதும் ஏதேனும் உபகுழுக்களின் கூட்டங்களைக் கூட்டுதல், நடாத்துதல் தொடர்பான நடவடிக்கைமுறையும், வெற்றிடங்களை நிரப்புதல், கூட்டங்களுக்கான அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரலும், அதற்கான கூட்ட நடப்பெண்ணும் அதில் அலுவல்களை நடாத்துதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் முகாமைச் சபையினதும் உறுப்பாண்மை தொடர்பான தகுதிகளும் தகுதியீனங்களும் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமை செய்தலும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துதலும்.

(2) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்படும் விதி எதுவும் அதேபோன்ற கூட்டத்திலும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்படும் விதியொன்று ஆக்கப்படும் அதேமுறையிலும் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம், அல்லது நீக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் கணக்குகள்.

7. (1) முகாமைச் சபை, கூட்டுத்தாபனத்தின் வரவு செலவு பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு, கைமாற்றங்கள், கொடை, உதவுதொகை அல்லது கட்டணங்கள் என்பன மூலமாகக் கிடைக்கின்ற நிதி யாவும் கூட்டுத்தாபனத்தின் பெயரில் முகாமைச் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை மறுசீரமைப்பு செய்வதற்கும், முன்னேற்றுவதற்கும் அபிவிருத்தி செய்வதற்குமாகக் கூட்டுத்தாபனம் ஏதேனும் தேய்மான ஒதுக்கு அல்லது கடனாழ் நிதியத்தை உருவாக்கலாம்.

(4) கூட்டுத்தாபனத்தின், கணக்குகள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்படும் எவரேனும் தகைமைவாய்ந்த கணக்காய்வாளரால் அல்லது கணக்காய்வாளர்களால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் இலாபம் தேடும் அமைப்பாக இருத்தல் ஆகாது.

8. (1) கூட்டுத்தாபனம் இலாபம் அற்ற ஒழுங்கமைப்பாக அமைக்கப்பட்டு செயற்பட வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்தின் பங்கிலாபம் அல்லது இலாபம் எனும் வகையில் ஏதேனும் இருப்பின் அதன் பாகம் எதுவும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதல் ஆகாது.

(2) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது, அதனது எல்லாக் கடன்களையும் பொறுப்புக்களையும் கொடுத்துத் தீர்த்த பின்னர், எத்தன்மையானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனங்கள் யாவும், புண்ணிய, மத அல்லது கலாச்சார அமைப்பொன்றுக்கு ஒப்படைக்கப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

9. (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், கூட்டுத்தாபனத்திற்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக் கொடைகள் யாவும் முகாமைச் சபை தீர்மானிக்கும் ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனம், இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும், நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட எல்லாச் செலவினங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

மன்றத்தினால் செலுத்தப் படவுள்ளனவும் மன்றத்திற்குச் செலுத்தப் படவுள்ளனவுமான கடன்கள்.

10. இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்திற்குரிய எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப் படுதலும் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுவதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கத்திற்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

11. கூட்டுத்தாபனமானது, ஏதேனும் கொள்வனவு, அன்பளிப்பு, நன்கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்கு உரித்தாக்கப் படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைப் பெறவும், வைத்திருக்கவும் கூட்டுத்தாபனம் சட்டப்படி

ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்துமாற்ற அல்லது வேறுவகையில் கையாள அல்லது பொறுப்பிக்கவுமுள்ள முழுத் தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் இலச்சினை

**12.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்குச் சான்றாக அச்சாதனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

குடியரசினதும் மற்றையோரினதும் உரிமைகளைப் பேணல்.

**13.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் மக்கள்குழு அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்